ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2205/19 - 2020 දෙසැම්බර් මස 13 වැනි ඉරිදා - 2020.12.13

*2205/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**வான்படைச் சட்டம்**

**இல.**: MOD/DEF/HRM/SLAF/REG/02.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 (2) ஆம் யாப்புடன் இணைத்து வாசிக்கப்படுவதுமான (359 ஆம் அத்தியாயம் உடைய) வான்படைச் சட்டத்தின் 155 ஆம் உறுப்புரையின்கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

**கோட்டாபய ராஜபக்ச,**
*சனாதிபதி.*

கொழும்பு.
*2020, ஒற்றோபர் 29.*

**ஒழுங்கு விதி**

*1978 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதிய இலக்கம் 304 உடைய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978, இலங்கை தொண்டர் வான்படை ஒழுங்குவிதிகளில் 19 ஆம் ஒழுங்கு விதியினைத் தொடர்ந்து கீழ்க் குறிப்பிட்ட ஒழுங்குவிதியைச் சேர்ப்பதினூடாக இந்த ஒழுங்குவிதி இத்தால் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது:-*

*"19 (அ) சேவையின் நிமித்தம் அம்மாற்றத்திற்குத் தகுதியுடைய விமானப்படை உத்தியோகத்தர் அவரது 55 ஆவது வயதை அண்மித்ததும் விமானப் படைத் தளபதியின் அனுமதியுடன் தொண்டர் உபசேவைக்கு மாற்ற முடியும்:*

*ஆயினும் இவ்வொழுங்கு விதியின் மேற்குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கேற்ப தொண்டர் உபசேவைக்கு மாற்ற வேண்டிய விமானப்படை வீரரொருவரின் சேவை ஆனது விமானப்படையின் நலனைக் கருத்திற்கொண்டே நீடிப்புச் செய்தல் வேண்டும் என்று வான்படைத் தளபதி அபிப்பிராயப்படின் தொண்டர் வான்படை உத்தியோகத்தொருவரின் சேவைக்காலம் கோப்ரல் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு உரித்தான வயதெல்லையைத் தாண்டி முழுக்கூட்டுத்தொகை மூன்று வருடங்களை விஞ்சாதவாறு ஒரு தடவைக்கு ஒரு வருட கால அடிப்படையில் வான்படை தொண்டர் படையின் கட்டளையதிகாரியின் சிபாரிசின் பேரில் சேவை நீடிப்புச் செய்ய வான்படைத் தளபதிக்கு அனுமதி வழங்க முடியும்."*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*